தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயம், கடலூர்

M.C.O.P. No.1605/2024

மனுதாரர் தரப்பு **1-**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரதீப் | வயது | : 47 |
| கணவர் பெயர் | : ராஜீ | தொழில் | : தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | : குமராபுரம் | ஜாதி | : ------ |
| தாலுக்கா | : கடலூர் | சமயம் | : ------ |
| மாவட்டம் | : கடலூார் | மொபைல் | : 9500590256 |

சட்டம் 49/1969ன் விதிமுறைகளின்படி 02.02.2026 நாளாகிய இன்று செல்வி. **R.**தனம்**, B.A., B.L.,** மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி**,** கடலூர், அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை**:**

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்திலுள்ள வாசகங்கள் உண்மை என்றும் சரி என்றும் உறுதியளிக்கிறேன். எனது சாட்சியத்தின் அடிப்படையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன். எனது தரப்பில் எனது சான்றாவணமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டது.

**2**ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை **:**

நான் திருவந்திபுரம் கோவிலிருந்து பாலுர் - கடலூர் சாலையில் செல்லும்போது விபத்து நடந்தது. நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். என்னுடைய ஓட்டுநர் உரிமம் மற்றும் என் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தெற்கு வடக்கு சாலையில் வடக்கு ஓரமாக சென்றேன். எனக்கு பின்னால் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு பின்னால் வந்து மோதியதால் மேற்படி வாகனம் வேகமாக வந்ததா என்று தெரியாது என்றால் வேகமாக தான் வந்து மோதியது. நான் விழுந்தவுடன் எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. நான் தான் நடுரோட்டில் சென்றேன் என்றால் சரியல்ல. விபத்து 23.08.2024 அன்று ஏற்பட்டது. மூன்று நாட்கள் கழித்து 26.08.2024 அன்று தான் புகார் கொடுத்தேன் என்றால் சிகிச்சையில் இருந்தேன். என்னுடைய மருத்துவமனை விபத்து பதிவேட்டில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இன்று வரை என்னால் வேலை செய்யமுடியவில்லை. மருத்துவ பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வருமானம், வயது, தொழில் ஆகியவற்றை காண்பிக்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள நஷ்ட ஈடு அதிகப்படியானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை-இல்லை**